केनरा बैंक Canara Bank

(தலைமை அலுவலகம் : பெங்களூர்)
மேலூர் தூத்துக்குடி கிளை.

அசையா சொத்தின் ஏல விற்பனை பற்றிய அறிவிப்பு

2002-ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்கள் ரொக்கப்படுத்துதல், நிதி சொத்துக்களை மறுசீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமுலாக்கச் சட்டப்பிரிவு 13(4) மூலம் அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டு தற்போது ஷை சட்டப்பிரிவு 8 (6) & 9 படி கீழே அட்டவனையில் கண்ட சொத்து ஏலம் மூலம் விற்பனைக்கு உள்ளது.

விருப்பம் உள்ளவர்கள் மூடிய டெண்டர் மூலம் கீழே கண்ட நிபந்தனையின் பேரில் கலந்து கொள்ளலாம்.

1. கடன் கொடுத்தவர் பெயர், விலாசம் : **கனரா வங்கி, மேலூர் தூத்துக்குடி**
2. கடனாளி / சொத்து அடமானம் வைத்தவர் பெயர், முகவரி : **M/s. KVS & Co. 145-9/111, எட்டயபுரம், தூத்துக்குடி.**

பங்குதாரர்கள்: 1. திரு. V. காளிராஜன், 2. திரு. V. கண்ணன்

அடமானதாரர்கள் : 1. திரு. V. காளிராஜன், திரு. V. முத்துமாரியப்பன், திரு. V. கண்ணன், கதவு எண் 50/E, சிவன் கோவில் தெரு, தூத்துக்குடி.
2. திருமதி. V. சாவித்திரி, கதவு எண் 50/E, சிவன் கோவில் தெரு, தூத்துக்குடி.

3. மொத்த நிலுவைத் தொகை 15.07.2011 தேதி வரை ரூ. 28,91,028/- (ரூபாய் இருபத்தெட்டு லட்சத்து தொண்ணூற்றி ஓராயிரத்தி இருபத்தெட்டு மட்டும்) மற்றும் 01.07.2011 முதல் பின் வட்டியும் இதர செலவுகளும் கட்டணங்களும்
4. டெண்டர் விண்ணப்பம் பெற கடைசி நாளும், நேரமும் : 25.08.2011 வியாழக்கிழமை மாலை 3.30 மணி
5. டெண்டர் விண்ணப்பம் கொடுக்கும் இடம் / அனுப்பும் இடம் : **முதன்மை மேலாளர் கனரா வங்கி, மேலூர் கிளை, 12, டுவிபுரம் மெயின் ரோடு, தூத்துக்குடி-628 002.**
6. டெண்டர் விண்ணப்பம் திறக்கும் தேதியும் / நேரமும் / இடமும் : **25.08.2011 வியாழக்கிழமை மாலை 4.00 மணி கனரா வங்கி, மேலூர் கிளை, 12, டுவிபுரம் மெயின் ரோடு, தூத்துக்குடி-628 002.**
7. **சொத்து விபரம்**

திரு. V. காளிராஜன், திரு. V. முத்துமாரியப்பன், திரு. V. கண்ணன் பெயரில் உள்ள சொத்துகள்

தூத்துக்குடி பதிவு மாவட்டம், தூத்துக்குடி கீழூர் துணை பதிவாளர் அலுவலக எல்லை தூத்துக்குடி தாலுகா மாப்பிள்ளையூரணி கிராமம் நில அளவு **30.69** சென்ட் சர்வே எண் **76/6** மற்றும் சர்வே எண் **76/7** ஆகிய இரு பகுதிகள்.

முதல் பகுதியில் உள்ள **20.19** சென்ட் நிலத்திற்கான எல்லைகள்

தெற்கே: கிழமேல் ரோடு **வடக்கே:** அந்தோனி நிலம் **கிழக்கே:** காசிராஜன் நிலம் **மேற்கே:** கணபதி நிலம் **அளவுகள்** வடக்கே கிழமேல் **68** அடி தெற்கே கிழமேல் **66** அடி மேற்கே தென்வடலாக **124.3** அடி மற்றும் அடி கிழக்கே தென்வடலாக **138.3** அடி ஆக பரப்பு **8798** சதுரஅடி அதவாது **20.19** சென்ட்

இரண்டாவது பாகம் **10.5** சென்ட் பரப்புள்ள சொத்துக்கான எல்லைகள்

தெற்கே: கிழமேல் ரோடு **வடக்கே:** குருசாமி நிலம் **கிழக்கே:** ஞானராஜ் பரமசிவம் நிலம் **மேற்கே:** சுவான்தாரர் நிலம் ஆகபரப்பு **4574** சதுரஅடி அதவாது **10.50** சென்ட்

2. திருமதி. V. சாவித்திரி பெயரில் உள்ள சொத்து

தூத்துக்குடி பதிவு மாவட்டம், தூத்துக்குடி இணை துணை பதிவாளர் அலுவலக எல்லை தூத்துக்குடி தாலுகா சங்கரபேரி கிராமம் சர்வே எண் **219/1A/2B2B** மற்றும் பிளாட் எண் **1** பரப்பு **1** ஏக்கர் பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டது அதில் பிளாட் எண்கள் **15** மற்றும் **20** சொத்துக்கான எல்லைகள்

16 அடி அகல கிழமேல் ரோட்டிற்கு **தெற்கே** பிளாட் எண் **14 & 19** க்கு கிழக்**கே** **20** அடி அகல கிழமேல் ரோட்டிற்கு **வடக்கே** முருகேசன் நிலத்திற்கு **மேற்கே**
மேற்கண்ட எல்லைக்குள் வடக்கே **1**வது பிரிவு பிளாட் எண் **15**க்கான பரப்பு

அளவுகள் வடக்கே கிழமேலாக **27** 1/2 அடி தெற்கே கிழமேலாக **38** 1/2 அடி மேற்கே தென்வடலாக **65** 3/4 அடி கிழக்கே தென்வடலாக **66** 1/4 அடி ஆக **2178** சதுரஅடி அதாவது **5** சென்ட் மற்றும்

அதன் தெற்கே **2**வது பிரிவு பிளாட் எண் **20**க்கான பரப்பு

அளவுகள் வடக்கே கிழமேலாக **38** 1/2 அடி தெற்கே கிழமேலாக **51** 1/2 அடி மேற்கே தென்வடலாக **40** 3/8 அடி கிழக்கே தென்வடலாக **58** 1/2 அடி ஆக **2224.687** சதுரஅடி அதாவது **5.107** சென்ட்

ஆக மொத்த பரப்பு பிரிவு **1** மற்றும் **2** பிளாட் எண் **15** மற்றும் **20** அதாவது **10.107** சென்ட்

8. நிர்ணயிக்கப்பட்ட தொகை

சொத்து 1 (மாப்பிள்ளையூரணி கிராமத்தில் **30.69** சென்ட் நிலம்)
ரூ. 21,50,000/- (ரூபாய் இருபத்தோறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)
சொத்து 2 (சங்கரபேரி கிராமத்தில் **10.5** சென்ட் நிலம்)
ரூ. 4,00,000/- (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்)

9. மற்ற விதிகளும், நிபந்தனைகளும்

அ) அட்டவணையில் கண்ட சொத்து **"உள்ளது உள்ள நிலையிலேயே"** விற்பனைக்கு உள்ளது. வில்லங்கங்கள் உட்பட (வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதும்மில்லை) மேலும் வில்லங்கம் தொடர்பான சந்தேகத்திற்கு கீழே கையொப்பம் இட்டுள்ள அதிகாரியை முன்வைப்புத் தொகை கட்டும் முன்பு விதி எண் (9) ஈ படி தொடர்பு கொள்ளலாம்.

ஆ) நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு கீழ் விற்பனை செய்யப்படமாட்டாது.

இ) அட்டவணைச் சொத்தை கனரா வங்கி மேலாளரின் முன் அனுமதியுடன் **18.8.2011** அன்று மாலை **3.00** மணி முதல் **5.00** வரை பார்வையிடலாம்.

ஈ) விருப்பமுள்ள விண்ணப்பதாரர் வெள்ளைத்தாளில் டெண்டர் தொகையை எழுதி மூடி முத்திரையிட்ட கவரின் மீது தனித்தனியாக சொத்து விபரத்தை **"M/s. KVS & Co. மாப்பிள்ளையூரணி கிராமம் முதல் சொத்தை வாங்குவதற்கான டெண்டர்"** என்று எழுதி 10% முன்வைப்பு தொகையான ரூ.2,15,000/- க்கு வரைவோலையுடன் அல்லது
"M/s. KVS & Co. சங்கரபேரி கிராமம் இரண்டாவது சொத்தை வாங்குவதற்கான டெண்டர்" என மூடி முத்திரையிட்ட கவர் மீது எழுதி 10% முன்வைப்பு தொகையான ரூ. 40,000/- க்கு வரைவோலையுடன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி, மேலூர் தூத்துக்குடி கிளைக்கு **25.8.2011** அன்று மாலை **3.30** மணிக்குள் அனுப்பி வைக்கவும்.

உ) அதிகபட்ச விற்பனை தொகையினை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி நிர்ணயமும், முடிவும் செய்வார்.

ஊ) டெண்டரில் வெற்றி பெற்றவர் விற்பனை தொகையில் **25%** பணம் உடனே கட்ட வேண்டும். (முன் வைப்புத் தொகையும் சேர்த்து) தவறும்பட்சத்தில் முன்வைப்புத் தொகையான **10%**ஐ இழக்க நேரிடும். மீதி தொகையை **15** நாட்களுக்குள் கண்டிப்பாக செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் முன்வைப்புத் தொகையும் சேர்த்து **25%** விற்பனைத் தொகை அனைத்தையும் இழக்க நேரிடும்.

எ) முத்திரை தீர்வை, பதிவு கூலி, போக்குவரத்து மற்றும் இதர செலவுகளை வெற்றி பெற்ற டெண்டர்தாரரே முழுவதும் ஏற்க வேண்டும்.

ஏ) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு டெண்டரை ஒத்தி வைக்கவோ / ரத்து செய்யவோ, நிபந்தனைகளை மாற்றி அமைக்கவோ முழு அதிகாரம் உண்டு. அவ்வாறு செய்யும் பட்சத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எந்த ஒரு முகாந்திரமும் கூறத் தேவையில்லை.

ஐ) டெண்டரில் வெற்றி பெற்றவர் மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளையோ, விதிமுறைகளையோ எவ்விதத்திலாவது மீறி நடக்கும் பட்சத்தில் அவர் செலுத்திய முன்வைப்புத் தொகையையும், மற்ற தொகைகளையும் இழக்க நேரிடும்.

ஒ) மேலும் விபரங்களுக்கு கனரா வங்கி, மேலூர் தூத்துக்குடி கிளை தொலைபேசி எண்கள் **0461 2322371** மூலம் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்

ஓ) அதிகபட்ச விற்பனைத் தொகைக்கு விற்பனை உறுதி செய்த உடன் வெற்றி பெறதாத விண்ணப்பதாரர்களின் முன்வைப்புத் தொகை கேட்புக் காசோலைகள் உடனடியாகத் திருப்பித் தரப்படும்.

இடம் : தூத்துக்குடி
நாள் : 22.07.2011

அதிகாரபூர்வ அதிகாரி, கனரா வங்கி,
மேலூர் தூத்துக்குடி.